**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2023 ம் ஆண்டு ஜுன் மாதம் 30-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.774/2015

வா.சா.1 செல்வராஜ்

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவாச் சொத்துக்கள் முதலில் யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் ராமசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டிருந்தது. என் தாயார் வழியில் பாத்தியப்பட்டு நாங்கள் அனுபவித்து வருகிறோம். என் தாயார் பெயர் சரசாயம்மாள் ஆகும். என் தாயார் ராமசாமி கவுண்டரின் வாரிசு ஆகும். என் தாயார் ராமசாமி கவுண்டரின் வாரிசு என்று காண்பிப்பதற்கு வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் தாயாருக்கு முன்பு ராமசாமி கவுண்டரும், குப்பாயம்மாளும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். ராமசாமி கவுண்டர், குப்பாயம்மாள் இறப்பு சான்று, வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாச் சொத்து எந்த கிராமத்தில் உள்ளது, அதன் விஸ்தீரணம் எவ்வளவு, எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் தாவாச் சொத்து சேமூர் கிராமத்தில் உள்ளது, அதன் விஸ்தீரணம் 3 ஏக்கர் ஆகும், அதன் சர்வே எண் தெரியாது. தாவாச் சொத்தை வாரிசு உரிமை அடிப்படையில் அனுபவித்து வருகிறோமா அல்லது வேறு வகையில் அனுபவித்து வருகிறோமா என்றால் வாரிசு அடிப்படையில் அனுபவித்து வருகிறோம். சரசாயாள் என்பவரின் வாரிசு அடிப்படையில் அனுபவித்து வருகிறோம். தாவாச் சொத்தில் எங்களுக்கு எப்படி பங்கு வந்தது என்றால் 12 வருடத்திற்கு முன்பாக அனைவரும் அனுபவித்து வந்தோம், பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் உத்தரவு வாங்கி அதை பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து தங்களுக்கு மட்டுமே உரிமை இருக்கிறது என்று சொல்லி எங்களது அனுபவத்திற்கு இடையூறு செய்தார்கள். வசந்தி, அருக்காணி ஆகியோர்கள் பாகப்பிரிவினை கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு போட்டார்கள். அந்த வழக்கில் நீதிமன்றத்தில் இருந்து எங்களுக்கு சம்மன் வந்தது. அந்த வழக்கில் நாங்கள் வக்கீல் வைத்து ஆஜராகி வழக்கு நடத்தவில்லை. அதனால் அந்த வழக்கில் எப்படி

தீர்ப்பானது என்ற விபரம் எங்களுக்குத் தெரியாது. எனக்கு சொத்தில் பங்கு இல்லை என்று யார் சொல்கிறார்கள் என்றால் 12 பேர் சேர்ந்து சொத்தில் பங்கு இல்லை என்று சொல்கிறார்கள். சொத்து நான் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல, நானும் அனுபவித்து வருகிறேன். 15 வருடமாக எங்களுக்கு சொத்தில் பங்கு இல்லை என்று சொல்லி வருகிறார்கள். என் தாயார் 2001 ம் வருடம் இறந்தார். என் தாயார் இறந்த பிறகு என் தாயாரின் பங்கை தான் கேட்கிறோம். என் தாயாருக்கு சொத்தில் என்ன பங்கு உள்ளதோ, அந்த பங்கை கேட்கிறோம்.

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**